# 8

# ஜுமுஆத் தொழுகை

ஒவ்வொரு சமூகத்திலும் ஒவ்வொரு நாள் விசேட தினமாகக் கொள்ளப்படுகிறது. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கும் அவர்களது சமுதாயத் தினருக்கும் அல்லாஹ்வினால் வழங்கப்பட்ட விசேட தினம் யவ்முல் ஜுமுஆ என அழைக்கப்படுகின்ற வெள்ளிக்கிழமையாகும். இந்நாளுக்குரிய சிறப்புகளைத் தெரிந்து வணக்கங்களிலும் நன்மையான காரியங் களிலும் ஈடுபடுவது முஸ்லிம்களாகிய எங்களது கடமையாகும். வெள்ளிக் கிழமையில் இடம்பெறுகின்ற முக்கிய அமல் ஜுமுஆத் தொழுகையாகும்.

ஜுமுஆவின் முக்கியத்துவத்தை அல்குர்ஆன் பின்வருமாறு கூறுகின்றது:

**''நம்பிக்கையாளர்களே! வெள்ளிக்கிழமையன்று ஜுமுஆ தொழுகைக்காக அழைக்கப்பட்டால் வியாபாரத்தை விட்டுவிட்டு அல்லாஹ்வை நினைவுகூர நீங்கள் விரைந்து செல்லுங்கள். அறிவுடையவர்களாக இருந்தால் இதுவே உங்களுக்கு மிக நன்று. (இதனை நீங்கள் அறிந்துகொள்வீர்களாக).''** (62: 09)

வெள்ளிக்கிழமையின் சிறப்புப் பற்றி நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இவ்வாறு குறிப்பிட்டார்கள்:

''உங்களிடத்தில் சிறந்த நாள் வெள்ளிக்கிழமை நாளாகும். அந்நாளில்தான் நபி ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் படைக்கப்பட்டார்கள், அதிலேதான் அவர்கள் மரணித்தார்கள். அதில்தான் மறுமை நாள் நிகழும். அத்தினத்தில்தான் மனிதன் விசாரணைக்காக மீண்டும் எழுப்பப்படுவான்.



இத்தினத்தில் அதிகமதிகம் என் மீது ஸலவாத்துச் சொல்லுங்கள். நிச்சயமாக நீங்கள் சொல்லக்கூடிய ஸலவாத்து என்னிடத்தில் எடுத்துக் காட்டப்படும், நபிமார்களின் உடலை பூமி உண்பதை (அழிப்பதை) விட்டும் அல்லாஹ் ஹராமாக்கினான்'' (அஹ்மத்)

## ஜுமுஆ தினத்தன்று கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்கு முறைகள்

வெள்ளிக்கிழமை ஜுமுஆத் தொழுகைக்காகப் பல் துலக்கி குளிப்பது முக்கிய ஸுன்னத்தாகும். பள்ளிக்கு வரும்போது தலைக்கு எண்ணெய் மற்றும் நறுமணம் பூசிக் கொள்வதோடு அழகான ஆடையை அணிந்து கொள்வது சிறந்ததாகும். பள்ளியில் இருக்கின்ற மனிதர்களைக் கடந்து செல்லாமல் தன்னால் முடியுமான அளவு தொழுதுவிட்டு மௌனமாக இருந்து கதீபின் உரையைச் செவிதாழ்த்திக் கேட்க வேண்டும். அதன் பின்னர் தொழுகையை நிறைவேற்ற வேண்டும். இவ்வாறு செய்பவருடைய முந்தைய ஜுமுஆவுக்கும் மறு ஜுமுஆவுக்கும் இடையேயுள்ள சிறு பாவங்கள் மன்னிக்கப்படும் (புஹாரி, அஹ்மத்) என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியுள்ளார்கள்.



ஜுமுஆ நாளில் ஸூரத்துல் கஹ்ஃப் (18 ஆவது) அத்தியாயத்தை ஓதுதல் அடுத்த ஜும்ஆ வரை உள்ளத்தைப் பிரகாசிக்கச் செய்கிறது. அத்துடன் வெள்ளிக்கிழமைகளில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது அதிகமாக ஸலவாத் சொல்லுவது சிறந்த நற்செயல்களில் ஒன்றாகும். (அபூ தாவூத், நஸாஈ)

''ஜுமுஆ நாளில் ஒரு நேரம் உண்டு. அந்த நேரம் மிகவும் குறைந்த நேரமே. அதில் ஒரு முஸ்லிமான அடியார் தொழுகையில் நின்று அல்லாஹ்விடம் எதையேனும் கேட்டால் அதை அவருக்கு அல்லாஹ் கொடுக்காமல் இருப்பதில்லை'' (இப்னு மாஜா) என நபி மொழி கூறுகின்றது.

ஜுமுஆத் தொழுகை என்பது வெள்ளிக்கிழமை ழுஹர் தொழுகைக்குப் பதிலாக இமாம் மிம்பரில் குத்பா நிகழ்த்திய பின்னர் தொழப்படும் இரண்டு ரக்அத்கள் கொண்ட தொழுகையாகும். இத்தொழுகை, அனைத்து முஸ்லிம்கள் மீதும் கட்டாயக் கடமையாகும். இதன் மூலம் ஒவ்வொரு முஸ்லிமும் வாரத்தில் ஒரு நாள் சன்மார்க்க உபதேசங்களைச் செவிமடுத்துக் கற்றுக் கொள்ளுதல், ஊரிலுள்ள ஏனைய மஹல்லாக்களைச் சேர்ந்த முஸ்லிம் சகோதரர்களை ஓரிடத்தில் சந்தித்தல் மற்றும் வாராந்தம் ஜுமுஆவுக்கு இடைப்பட்ட கால முக்கிய விவகாரங்களைக் கலந்துரையாடல், தேவையான அறிவுறுத்தல்களை வழங்கல் போன்ற பல வாய்ப்புக்கள் கிடைக்கப் பெறுகின்றன.

இத்தொழுகைக்கும் இத்தொழுகை இடம்பெறும் நாளான வெள்ளிக் கிழமைக்கும் அல்லாஹ் பல சிறப்புக்களை அளித்துள்ளான்.

## ஜுமுஆவுக்கு முற்கூட்டி சமுகமளித்தல்

'ஜுமுஆ நாள் வந்து விட்டால் வானவர்கள் பள்ளியின் நுழைவாயிலில் நின்று கொண்டு முதலில் வருபவரையும், அதைத் தொடர்ந்து வருபவர்களையும் வரிசைப்படி பதிவு செய்கிறார்கள். முதலில் வருபவர் ஒட்டகத்தையும், அதற்கடுத்து வருபவர் மாட்டையும், அதற்கடுத்தவர் ஆட்டையும் குர்பானி கொடுத்தவர் போன்று கருதப்படுவர். பிறகு வருபவர் கோழி, அதனையடுத்தவர் முட்டையையும் தானம் செய்தவர் போன்று கணிக்கப்படுவர். இமாம் மிம்பரில் ஏறிவிட்டால் வானவர்கள் தங்கள் ஏடுகளை மூடிவிட்டுச் சொற்பொழிவைக் கேட்க ஆரம்பித்து விடுவார்கள்' என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். (புஹாரி)

நம்முடைய பெயர் வெள்ளியன்று பள்ளிக்கு வரும் மலக்குகளின் பதிவேட்டில் பதியப்பட வேண்டுமெனில், நாம் இமாம் மிம்பரில் ஏறுவதற்கு முன்பே பள்ளிக்குச் சென்றாக வேண்டும். ஜுமுஆத் தொழுகைக்காக மஸ்ஜிதுக்கு வருபவர் இமாம் உரை நிகழ்த்திக் கொண்டிருந்தாலும் கூட ஜுமுஆத் தொழுகைக்கு முன் சுருக்கமாக இரண்டு ரக்அத்கள் தஹிய்யதுல் மஸ்ஜித் தொழுகையைத் தொழுது கொள்ள வேண்டும்.

''யார் குளித்துவிட்டு முன்கூட்டியே (பள்ளிக்கு) வந்து, இமாமுக்கு நெருக்கமாக இருந்து அவரது உரையைச் செவியுற்று, ஜுமுஆவை வீணாக்காமல் இருக்கின்றாரோ அவருக்கு அவர் எடுத்து வைக்கும் ஒவ்வொரு காலடிக்கும் ஓர் ஆண்டு நோன்பு நோற்று, ஓர் ஆண்டு நின்று வணங்கிய கூலி உண்டு'' (திர்மிதி) என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

பருவ வயதை அடையாதவர்கள், பெண்கள், பள்ளிக்கு வர முடியாத நிலையிலுள்ள நோயாளிகள், பயணிகள் முதலானோர் ஜுமுஆத் தொழுகை கடமையாக்கப்படாதோர் ஆவர்.

ஜுமுஆவில் இமாம் சொற்பொழிவு நிகழ்த்தும் போது அவரது சொற்பொழிவைச் செவிமடுத்துக் கொண்டிருப்பவர்கள் பேசுவது முற்றாகத் தடைசெய்யப்பட்ட விடயமாகும். பேசிக் கொண்டிருக்கும் ஒருவரை விழித்து, 'பேசாமலிரு' என்று சொல்வது கூட இருவரது நன்மையையும் இழக்கச் செய்துவிடும் என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எச்சரித்துள்ளார்கள்.

ஜும்ஆத் தொழுகையினதும் வெள்ளிக்கிழமையினதும் சிறப்புக்களையும் பயன்களையும் குறிப்பிட்டுள்ள இஸ்லாம், ஜுமுஆத் தொழுகையை அலட்சியம் செய்வோரை எச்சரித்துமுள்ளது. அதாவது: ''அலட்சியமாக மூன்று ஜுமுஆக்களை யார் விட்டு விட்டாரோ அவரது உள்ளத்தில் அல்லாஹ் முத்திரையிட்டு விடுகின்றான்'' என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். (திர்மிதி)

அவ்வாறே ஜுமுஆவை அலட்சியம் செய்து வீடுகளில் இருப்போரை அவர்களது வீட்டுடன் எரித்துவிட எனக்குத் தோன்றுகிறது என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் குறிப்பிட்டுள்ளமை ஜுமுஆவின் முக்கியத்துவத்தை மேலும் வலியுறுத்து கின்றது.

**எனவே ஜுமுஆவின் சிறப்புக்களையும் அதனை விடுவதன் ஆபத்தையும் கவனத்திற் கொண்டு ஜுமுஆவைத் தவற விடாமல் நிறைவேற்றுவோமாக. ஜுமுஆத் தொழுகைக்கு முன் நிகழ்த்தப்படுகின்ற குத்பா உரையைத் தவறாமல் முழுமையாகச் செவிமடுத்து அன்றைய தினத்தின் பூரண பயனைப் பெற்றுக் கொள்வோமாக!**

**பயிற்சி**

1. ஜுமுஆத் தொழுகை எத்தனை ரக்அத்களைக் கொண்டது?
2. வெள்ளிக் கிழமையின் சிறப்புக்களில் இரண்டைக் குறிப்பிடுக.
3. ஜுமுஆ நாளில் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்குகள் எவை?
4. ஜுமுஆத் தொழுகையின் மூலம் பூரணமான நன்மைகளைப் பெற்றுக்கொள்வதற்கு கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்குகள் ஐந்து தருக.
5. ஜுமுஆ குத்பாவை செவிமடுப்பதால் ஏற்படும் நன்மைகளையும், புறப்பணிப்பதால் ஏற்படும் பாதிப்புகளையும் எடுத்துக்காட்டுக.